31.07.2025 MCOP No.63/2020

சாட்சி: PW.1 சித்ரா

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. விபத்தின் போது என் கணவர் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் பதிவெண் TN 63 Q 4586 இருசக்கர வாகனம் என்றால் சரிதான். அவருக்கு முன்னால் சென்று கொண்டிருந்த லாரியின் பதிவெண் TN 36 AY 8787 என்றால் சரிதான். என் கணவர் முன்னால் சென்றுகொண்டிருந்த லாரியின் பின்புறம் மோதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் கணவருக்கு விபத்தின்போது ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் எனக்குத் தெரியவில்லை, அவர் விபத்தின் போது ஹெல்மெட் அணிந்திருக்கவில்லை என்றால் சரிதான்.

2. என் கணவர் விபத்தின்போது என்ன வேலை பார்த்தார் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் ம.சா.ஆ.3 ஆனது என் கணவர் ஓட்டியதற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை என்றால் சரிதான். ம.சா.ஆ.3ல் வாகனத்திற்கு முன்புறம் தான் சேதம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.4 ஆனது டிப்பர் லாரியின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை என்றால் சரிதான். அதில் லாரியின் பின்புறம் வலதுகை பக்கத்தில்தான் சேதம் உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. விபத்தானது என் கணவரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டதால் இந்த மனுவில் பெயரில் எனக்கு எவ்வித இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த மனுவானது 3ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.